StudentBounty.com

NMBR. 2011

Register Number

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## ( செய்யுளும், இலக்கணமும் )

## Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் ஐந்து வரிகளில் விடை எழுதுக : 4 × 2 = 8

1. அகநானூறு எத்தனைப் பிரிவுகளாக உள்ளது ?

2. வையகமும் வானகமும் ஒப்பாகா - எதற்கு ?

3. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை ?

4. அந்தாதி - விளக்குக.

5. நாடெங்கும் புத்தகசாலை ஏன் வேண்டும் ?

6. தேவார மூவர் யாவர் ?

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக : 3 × 4 = 12

7. கம்பர் 'நன்றே நம்பி குடிவாழ்க்கை' என வியந்து கூறுவதன் நயத்தை விளக்குக.

8. நற்றாய் காக்கைக்குப் பராய்க்கடன் உரைத்தவாற்றைப் புலப்படுத்துக.

9. பொறையுடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் வழிநின்று விளக்கு.

10. கோலியாத்து தாவீதனைக் கண்டு வெகுண்டு உரைத்தவை யாவை ?

11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள் ?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளில் விடை எழுதுக: 3 × 4 = 12

12. தலைவி மேகத்திடம் மொழிந்த தூதுமொழிகள் யாவை ?

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

14. சுரதா 'ஓர் உவமைக் கவிஞர்' என்பதை 'சிக்கனம்' என்னும் கவிதையிலிருந்து சான்று காட்டி விளக்குக.

15. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை ?

16. சிலுவையிற் பரித்தியாகம் செய்த பெருமானைக் கிருஷ்ணப்பிள்ளை எவ்வாறு அஞ்சலி செய்கிறார் ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** இருபது வரிகளில் விடை எழுதுக. 1 × 8 = 8

17. 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தின் வாயிலாக திருவள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. மருண் மாலைப்போதில் கண்ணகி இனைந்து ஏங்கி உரைத்தனவும், கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் எழுதுக.

19. மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுது
4 × 1

20. "யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ"

அ) இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

ஆ) இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

இ) இஃது யார் யாரிடம் கூறிய கூற்று ?

ஈ) இதில் 'கள்வன்' எனக் குறிப்பிடப்பட்டவன் யார் ?

*அல்லது*

21. "வாங்கிய ஆழி தன்னை வஞ்சர்ஊர் வந்த தாமென்
றாங்குயர் மழைக்கண் ணீரால் ஆயிரம் கலசம் ஆட்டி"

அ) இச்செய்யுளடிகள் எந்நூலில் இடம் பெற்றுள்ளன ?

ஆ) இச்செய்யுளடிகள் இடம் பெற்றுள்ள நூலின் ஆசிரியர் யார் ?

இ) இச்செய்யுளில் 'ஆழி' என்பதன் பொருள் யாது ?

ஈ) வஞ்சர் ஊர் எது ?

VI. 22. "நண்ணுமிளமை" எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. 4 + 2 = 6

23. "மறவற்க" எனத் தொடங்கும் திருக்குறளையும் "தொழில்" என முடியும் திருக்குறளையும் அடிபிறழாது எழுதுக. 2 + 2 = 4

VII. 24. எவையேனும் ***இரண்டு*** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2 × 2 = 4

அ) ஓம்புமின் ஆ) கொள்வர் இ) துறத்தி

ஈ) அறைதல் உ) முழங்கிய ஊ) நடந்தன.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



25. பின்வரும் கீழ்க் கோடிட்ட தொடர்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. 3 × 2 = 6

அ) திருந்து மொழி ஆ) வல்விரைந்து

இ) தீது ஓரீஇ ஈ) மா ஞாலம்

உ) அவியா மதிவிளக்கு ஊ) இனிது இனிது.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2 × 2 = 4

அ) நானென்று ஆ) கயன்முள் இ) முதுமரம்

ஈ) மணிக்கழுத்து உ) விண்ணிடி ஊ) பூஞ்சோலை.

27. சான்று தந்து விளக்குக. 1 × 4 = 4

பொதுவியல் திணை அல்லது வரைவு கடாதல் துறை.

28. "இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள் 1 × 4 = 4

வன்மை மடவார்ப் பொறை"

- இக்குறட்பாவில் அமைந்த அணியைச் சுட்டுக.

***அல்லது***

உவமை அணி அல்லது சொற்பொருட் பின்வருநிலையணியை விளக்குக.

VIII. பொருத்துக : 4 × 1 = 4

| திணை | | பாடியோர் |
|---|---|---|
| 29. குறிஞ்சி | — | ஓரம் போகியார் . |
| 30. முல்லை | — | அம்மூவனார் |
| 31. மருதம் | — | ஓதலாந்தையார் |
| 32. நெய்தல் | — | கபிலர் |
| | — | பேயனார். |

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 10

33. புறநானூற்றின் திணைகள்

அ) ஐந்து

ஆ) பதினொன்று

இ) பத்து.

34. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

அ) குறிஞ்சிப்பாட்டு

ஆ) முல்லைப்பாட்டு

இ) பரிபாடல்.

35. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

அ) 70

ஆ) 38

இ) 25.

36. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி

ஆ) திருவள்ளுவமாலை

இ) நாலடியார்.

37. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் சிறப்புப் பெயர்களுள் ஒன்று

அ) கண்ணகி காதை

ஆ) சிறப்பதிகாரம்

இ) உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

38. கம்ப நாடகத்தின் யாப்பு வண்ணங்களுக்குக் கூறப்படும் கணக்கீடு

அ) தொண்ணூற்றாறு

ஆ) நூற்றியெட்டு

இ) நூறு.

39. உத்தரகாண்டத்தைப் பாடியவர்

அ) ஒட்டக்கூத்தர்

ஆ) வான்மீகி

இ) புகழேந்திப் புலவர்.

40. கவிச் சக்கரவர்த்தி, கவிராட்சசன் என்றெல்லாம் புகழப்படுபவர்

அ) கம்பர்

ஆ) ஒட்டக்கூத்தர்

இ) இளங்கோவடிகள்.

41. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம்

அ) கலம்பகம்

ஆ) உலா

இ) பள்ளு.

42. பிரபந்தம் என்னும் வடசொல் உணர்த்தும் பொருள்

அ) நகைச்சுவை நூல்

ஆ) நன்கு கட்டப்பட்டது

இ) அறிவுரை நூல்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers
StudentBounty.com

StudentBounty.com

43. சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற நூல்

அ) பிசிராந்தையார்

ஆ) பாண்டியன் பரிசு

இ) குடும்ப விளக்கு.

44. வடமொழியில் பாரதம் பாடியவர்

அ) வான்மீகி

ஆ) வியாசர்

இ) காளிதாசர்.

45. நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல் என்று பாடியவர்

அ) பாரதிதாசன்

ஆ) வாணிதாசன்

இ) பாரதியார்.

46. கிறித்துவக் கம்பர் என்றழைக்கப்பட்டவர்

அ) கம்பர்

ஆ) வீரமாமுனிவர்

இ) எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை.

47. சின்னச்சீறா என்ற நூலை எழுதியவர்

அ) உமறுப்புலவர்

ஆ) குணங்குடி மஸ்தான்

இ) பனு அகுமது மரைக்காயர்.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

48. சுந்தரர் தேவாரம்

அ) முதலாந்திருமுறை

ஆ) ஏழாந்திருமுறை

இ) பன்னிரண்டாந்திருமுறை.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : $2 \times 2 = 4$

49. காலத்தி னாற் செய்த ................ சிறிதெனினும்

................ மாணப் பெரிது.

50. எப்பொருள் ................ கேட்பினும் அப்பொருள்

................ காண்ப தறிவு.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers